**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.120/2024**

**05.03.2026. அ.சா.1 பெரியசாமி த/பெ. முத்து**

Accused absent. Petition U/s. 355 BNSS filed and allowed.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் சேரியந்தல் பைபாஸ் மற்றும் நாச்சிப்பட்டு பைபாசில் டீ கடை வைத்துள்ளேன். சேரியந்தல் டீ கடையுடன் ஒரு பெட்டிக்கடை உள்ளது. வன்னியர் சங்கம் , பாட்டாளி மக்கள் கட்சி ஆகிய இரண்டும் வெவ்வேறு பிரிவுகள் என்றால் இரண்டும் ஒன்றுதான். வன்னியர் சங்கத்தில் அந்த சமூகத்தை சேர்ந்தவர்கள் மட்டும்தான் உறுப்பினர்கள் ஆக முடியும் என்றும், பாட்டாளி மக்கள் கட்சியில் யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆகலாம் என்றால் சரிதான். இரண்டும் ஒன்று என்று நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வன்னியர் சங்கத்தில் மாவட்ட தலைவர் பொறுப்பில் இருப்பதாக புகாரில் சொல்லியுள்ளேன். சம்பவம் நடப்பதற்கு முன்பிலிருந்து 3 வருடங்களாக தலைவர் பொறுப்பில் இருக்கிறேன். எதிரி பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட ஊடக பிரிவில் இருக்கிறார் என்றால் நான் வருவதற்கு முன் இருந்தார். எனக்கும் சுரேசுக்கும் அரசியல் ரீதியாக முன்விரோதம் இருந்தததாக எனது புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. கட்சியில் பொறுப்பில் உள்ளவர்மீது கட்சி தலைமைக்கு சொல்வதுதான் எதிரியின் வேலை என்றால் நான் இருந்தபோது அவர் அந்த பொறுப்பில் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் அவர் தற்போது மாநில ஊடக பிரிவில் பொறுப்பில் உள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த அன்று காலை 10.00 மணிக்கு என் ஊரை சேர்ந்த ஒருவரின் உறவினர் இறந்துவிட்டதால் நான் அவர்களுடன் சென்றுவிட்டேன். அந்த இறப்பிற்கு நான், சாரங்கபாணி, சுந்தரசாமி மற்றும் மணிகண்டன் ஆகியோருடன் எனது இருசக்கர வாகனத்தில் சென்றேன் என்றால் மணிகண்டனை தவிர மற்ற இருவரும் என்னுடன் வந்தார்கள். சம்பவம் நடந்த நேரத்தில் நான் தெளிவான மனநிலையில்தான் இருந்தேன். ஆர்ப்பாக்கம் கூட்ரோடு– மன்சூராபாத்திற்கும் இடையே சுமார் 10 கி.மீ இருக்கும். நான் என்னை பரிசோதித்த மருத்துவரிடம் ஆர்ப்பாக்கம் கூட்ரோட்டில் என்னை ஒரு நபர் கத்தியால் குத்தியதாக சொன்னேன். விபத்து பதிவேட்டு நகலில் மருத்துவரிடம் நான் மன்சூராபாத் பெட்ரோல் பங்க் அருகே தெரிந்த 3 நபர்களால் தாக்கப்பட்டேன் என்று நான் சொன்னதாக அவர் எழுதியிருந்தால் அது தவறு. மருத்துவர் நான் சொன்னதைதான் எழுதியுள்ளார் என்றால் நான் அவ்வாறு

சொல்லவில்லை. எனது புகாரிலும் மருத்துவரிடமும் பட்டன் பத்தியால் குத்தப்பட்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. பட்டா கத்தி என்றுதான் நான் சொன்னேன். பட்டா கத்தி என்றால் நீளமாக இருக்கும் என்றால் எனக்கு அதைபற்றி தெரியாது. நான் மருத்துவமனையில் இருந்தபோது கிருஷ்ணமூர்த்தி சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் ஒரு ஆண் காவலர் விசாரித்தார். அவர் பெயர் தெரியாது. நான் இரவு 12.00 மணிக்கு மயக்கம் தெளிந்த பிறகுதான் போலிசாரிடம் புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. அதற்கு முன்பே போலிசார் விசாரித்தார்கள். போலிசார் நான் சொல்ல சொல்ல அதை எழுதிக்கொண்டார்கள். நான் சொன்னதை அவர்கள் படித்து காட்டிவிட்டு அவர்கள் கொடுத்த பேனாவால் கையெழுத்து போட சொன்னார்களா என்றால் ஆமாம். அதனை பின்னிட்டு என்னை போலிசார் விசாரித்தார்களா என்றால் மறுநாள் விசாரித்தார்கள். நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதிக்கொண்டார்கள். மருத்துவமனையில்தான் விசாரித்தார்கள். புகாரிலும் வாக்குமூலத்திலும் என்னுடன் வந்த சாரங்கபாணியை எதிரி பட்டா கத்தியால் வயிற்றில் கிழித்து விட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் பட்டன் கத்தியால் கிழித்தார் என்று சொல்லியுள்ளேன். எதிரி யாரையும் திட்டவில்லை குத்தவில்லை என்றும் ஏற்கனவே இருந்த அரசியல் முன்விரோதத்தை கொண்டு சாலையின் ஓரத்தில் வெட்டப்பட்டிருந்த மரக்கொம்பின் மீது விழுந்த காயத்தினை வைத்துக்கொண்டு எதிரி மீது பொய் புகார் கொடுத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் நான் அதை மறுக்கிறேன். என்னுடன் இருசக்கர வாகனத்தில் வந்த சாரங்கபாணியும், சுந்தரசாமியும் என் உறவினர்கள் என்றால் சரிதான். எதிரிக்கும் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.